நிலைமை ஏற்பட்டது. செட்டில்மெண்ட் செய்வதற்கு இப்பொழுது இருக்கக்கூடிய விதிமுறைகளுக்குத் தகுந்த முறையில் கால தாமதம் ஆகத்தான் செய்யும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இதற்கிடையில் இனாம்தார்கள் விவசாயிகளை வெளியேற்றுவதையும், மரம் போன்றவற்றை வெட்டுவதையும் தடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது.

கனம் திரு. வெ. ராமையா: எந்த எந்த இடங்களிலே அம்மாதிரி கஷ்டங்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறதோ அங்கே அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது.

* 411 கேள்வி.—*திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:* கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இனாம் ஒழிப்பு சட்டத்தின் கீழ் வானூர் தொகுதியில் பொம்மையார் பாளையம், குயிலா பாளையம், பிள்ளைச்சாவடி முதலான கிராமங்களில் உள்ள நிலங்கள் அனாதீன (சர்க்கார் புறம் போக்காக) புறம்போக்காக மாற்றப்பட்டது உண்மையா?

கனம் திரு. வெ. ராமையா: இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவரவர்களே, இந்த குயிலா பாளையம், பொம்மைய பாளையம் கிராமங்களிலே உள்ள மயிலம் சிவசுப்பிரமணியர் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை அனாதீனப் புறம்போக்காக சர்க்கார் எடுத்துக்கொண்டார்கள். அங்கே முன்னால் பயிர் செய்து கொண்டிருந்தவர்கள் எல்லாம் வெளியேற்றப்பட்டார்கள். சர்க்கார் புறம்போக்காக வந்து விட்டன என்ற காரணத்தினால்தான் எத்தனை பேர்களுக்குப் பட்டா கொடுக்கப்பட்டது என்று கேட்டேன். அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். அந்த நிலங்களுடைய விஸ்தீரணம் எவ்வளவு? இனிமேலாவது அவர்களுக்குப் பட்டா செய்து கொடுப்பதற்கு முன்வருவார்களா?

கனம் திரு. வெ. ராமையா: அப்படி நடவடிக்கைகள் எடுப்பதற்கு முன்னால் செட்டில்மெண்ட் என்குயரி நடக்க வேண்டியிருக்கிறது. என்குயரி நடந்துகொண்டிருக்கிறது. இப்பொழுது என்குயரிக்குப் பாதகமான எதையும் நான் சொல்வது சரியல்ல.

Devasthanam lands

*412 Q.—SRI K. R. SAMBANDAM: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether any representation, dated 14th August 1964, has been made by the Mayuram tenants who have raised their houses in the Devasthanam lands in Municipal limits to repeal the City Tenants' Protection Act; and

7th November 1966]

(b) if so, the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) The Government consider that there is no need to repeal the Act in so far as it applies to the residential buildings in Mayuram Municipal town.

திரு. கோ. சி. மணி : தலைவரவர்களே, இந்த மாயவரம் நகராட்சிக்குள்ளே எல்லையிலே குடியிருக்கின்றவர்கள் பக்கத்திலே நிலங்களில் விவசாயம் செய்துவரும் விவசாயிகள்தான். விவசாயிகள் மனைகள் பாதுகாப்புக்கு விதியிருக்கிறது. அப்படி யிருந்தும் அங்கே விவசாயிகளைப் பாதுகாக்க அரசாங்கம் தயங்கு வானேன் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : பாதுகாப்புக் கொடுக்கும் சட்டத்தை ரிப்பீல் பண்ணவேண்டுமென்று சொல்கிறார்கள். பாதுகாப்பு கொடுத்து இருக்கிறோம், இதில் தயக்கமொன்றுமில்லை. சிடி டெனன்ட்ஸ் பாதுகாப்புச் சட்டத்தை அனுசரித்துத்தான் செய்யபடுகிறது. அதை ரிப்பீல் பண்ண வேண்டுமென்று சொல் கிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : யார் சொல்கிறார்கள் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கிராமப் புறத்தில் குடியிருப்பு மனைப் பாதுகாப்பு இருக்கிறது. மாயவரத்திலே முனிசிபல் எல்லையிலே இருக்கக்கூடியவர்கள் கிராமத்திலே இருக்கக்கூடிய வர்கள். ஆகவே யார் எந்தமாதிரி செய்யவேண்டுமென்று கேட்டாலும் சட்டம் அமல் நடத்தப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : நான் முதல் கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுதே சொல்லிவிட்டேன்.

திரு. கோ. சி. மணி : அவர்கள் வெளியேற்றப்படாமல் இருப் பதற்கு ஏற்ற வகையில் பாதுகாப்புக் கொடுக்கப்படும் என்று உறுதி மொழி கொடுப்பார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : சிடி டெனன்ட்ஸ் ஆக்ட் ரிப்பீல் ஆக வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறது. அது முடியாது என்று சொல்லியிருக்கிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தக் கோரிக்கை குடியிருப்பு மனையில் குடியிருப்பவர்களிடமிருந்து வந்ததா அல்லது தேவஸ் தான மடாதிபதிகளிடமிருந்து வந்ததா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதிலே ' சிடிசன்ஸ் ' என்றுதான் எழுதி இருக்கிறது.

[7th November 1966

திரு. பீ. கலியாணசுந்தரம்: கேள்வியிலிருந்து அப்படித்தான் தெரிகிறது. ஆனால் அந்தக் கோரிக்கை யாரிடமிருந்து வந்திருக்கிறது என்று ஃபைலைப் பார்த்துப் பதில் சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா: கொஞ்சம் நேரமானாலும் பொறுத்துக்கொள்ள வேண்டும். இதிலே வந்திருக்கக் கூடியதையெல்லாம் பார்க்கின்றபொழுது, ஏதோ ஒரு கிராமத்திலிருந்து வந்திருக்கிறது, தனிப்பட்டவர்கள்தான் நிறையக் கையெழுத்துப் போட்டிருக்கிறார்களா என்ன என்பது எனக்குத் தெரியவில்லை.

பர்மா அகதிகள்

*413 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், மாத்தூரில் பர்மா அகதிகளுக்காகக் காலனி கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

(இ) ஆமெனில், அதற்கான செலவு எவ்வளவு ?

(உ) அந்தக் காலனிக்கு என்ன பெயர் வைக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI V. RAMAIAH: (a) & (c) It was originally proposed to establish a township for Burma repatriates in Mathur area in Tiruchirappalli district with pucca buildings. This proposal was subsequently modified in the wake of the emergency and it was proposed to establish a colony in the area on a smaller scale with 750 families engaged on vegetable gardening and 100 families on dairy farming to begin with. The draft scheme in this regard worked out by the Collector of Tiruchirappalli has been forwarded to the Government of India for their approval. Their final reply is awaited. A proposal is also under consideration for allotment of housing plots to about 500 non-agriculturist families to be settled by securing employment in the various industries in this area.

In Mathur village, a scheme for settling 20 repatriate families on agriculture by allotting them 50 acres has already been implemented. The colonists have built houses themselves in the Government land.

A special Home for unattached women and a special residential school for school-going children of repatriates have also been established in Mathur.